**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 23** **நாள்: 01.04.2019**

**2019 பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, 18.04.2019 அன்று அரசு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் விடுமுறை அளிக்காத நிறுவனங்களின்மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையம் 2019 பாராளுமன்ற பொதுத்தேர்தல் தமிழகத்தில் 18.04.2019 அன்று ஒரே கட்டமாக நடைபெறும் என அறிவித்துள்ளது. மேலும், பாராளுமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பை உறுதிசெய்யும் வகையில், வாக்குப்பதிவு நடைபெறும் நாளான 18.04.2019 (வியாழக்கிழமை) அன்று அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு பள்ளிகள், தனியார் பள்ளிகள், கல்லூரிகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அனைத்து தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு பொது விடுமுறை நாளாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 18.04.2019 அன்று நடைபெற உள்ளது. எனவே, வாக்குப்பதிவு நடைபெறும் நாளன்று அனைத்து நிறுவனங்களுக்கும் பொது விடுமுறை அளிக்கப்பட வேண்டும். ஒருசில தனியார் பள்ளிகள் வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் இயங்க உள்ளதாக பெற்றோர்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டுள்ளன. அவ்வாறு இயங்கும் பள்ளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**